# Issue 37

## கிறிஸ்டடெல்ஃபியர்கள் யார் ?

கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் (Christadelphians) என்ற பதம் கிரேக்க மூலமொழிகளாகிய Christ மற்றும் adelphos என்ற பதங்களிலிருந்து உருவானது. இதன் அர்த்தம் "கிறிஸ்துவில் சகோதரர்" என்பதாகும். கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் என்ற உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயம் 'வேதாகமத்தில் முழுமையாக நம்பிக்கை வைக்கிற' மக்கள் கூட்டமாகும். வேதவாக்கியங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டவை என்று உறுதியாக நம்புகிறார்கள்.

நாங்கள், தேவனுடைய (ஒரே பேறான) குமாரனாகிய இயேசு கிறிஸ்து வல்லமையோடு பூமிக்குத் திரும்பி வருவார் என்றும், அவர் வருத்தங்கள், அக்கிரமம், ஆக்கிரமிப்புகளை நீக்கி, தமது ஜனங்களுக்கு நியாயத்தையும், சமாதானத்தையும், நீதியையும் கொண்டு வருவார் என்றும் நம்புகிறோம்.

நாம் மரித்தாலும், மரித்தோரிலிருந்து எழும்பி, நியாயந்தீர்க்கப்படுவோம் என்று நம்புகிறோம். அத்துடன், இப்போது வாழும் வாழ்க்கையில் தன்னயமும் பொல்லாங்கும் நிறைந்து வாழ்ந்தவர்கள் நித்தியத்துக்கு வாழமுடியாமல் அழிக்கப்படுவார்கள். அதற்கு மாறாக, தேவனுடைய வார்த்தையை நம்பி கீழ்ப்படிந்து ஜீவித்தவர்கள் நித்தியமாக ஜீவித்திருப்பார்கள். மேலும் ஒவ்வொருவரின் வாழ்விலும் இரண்டு முக்கியமானவைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று விசுவாசிக்கிறோம். அவைகளில் (1) தேவனிடம் முழு இருதயத்துடன் அன்பு கூர வேண்டும். (2) உன்னைப் போல பிறரை நேசிக்க வேண்டும்.

ஒருங்கிணைப்பாளர் : லினஸ் டேனியேல்
Email : linus@choose2live.info
வேதத்தின் சத்தியத்தை கேளுங்கள்
http// www.choose2live.info/new_creation

இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.
ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk
Website: www.readthebible.lk

### புது சிருஷ்டி பதிப்பாளர் குழு

**லினஸ் டேனியேல் : தலைமை ஒருங்கிணைப்பாளர்**
**ராஜபட்சம் ஆனந்தா : மொழிபெயர்ப்பு, பதிப்பு மற்றும் கணினி ஒருங்கிணைப்பாளர்**
**பவித்ரா : நிர்வாகம், உபப்பதிப்பாளர்**

**திருமதி கிலாடிஸ் சுகிர்தராஜ். சந்திர மோகன் மற்றும் திருமதி சாந்தி பவுல் அவர்களின் தமிழ் மொழிபெயர்ப்பு உதவிகளுக்காக சிறப்பான நன்றி கூறுகிறோம்.**

இந்த பத்திரிகையின் வாயிலாக, வேதவாக்கியங்களை வாசிக்க உங்களைத் தூண்டுவதே எங்கள் குறிக்கோள். இதிலுள்ள கட்டுரைகள் உங்களை ஆவிக்குரிய வளமூட்டி வளர்க்க உற்சாகப்படுத்தும் என நம்புகிறோம். நம்மை இரட்சிப்புக் கேற்ற ஞானமடையச் செய்வதால் வேதாகமத்தைத் தினமும் வாசிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

இந்த பத்திரிகையில் காணப்படும் எல்லா கட்டுரைகளும் அனைத்துலக கிறிஸ்டடெல்ஃபிய வழிமுறையிலிருந்து தெரிந்தெடுத்து மொழி பெயர்ப்பு செய்து பிரசுரமாகியுள்ளன.

*"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" **(2. கொரிந்தியர் 5:17).***



# நற்பழக்க வழக்கங்களை வளர்ப்பது - கவலைப்படுவதை விட்டு தீரனாக மாறு





**பொ**துவாக புத்தண்டின் ஆரம்பத்தில் மக்கள் புத்தாண்டுத் தீர்மானங்கள் செய்வதுண்டு. ஜனவரி மூன்றாம் வாரத்தீற்குள் நமது தீர்மானங்களைக் கைக் கொள்ளாமல் அவைகளை உடைத்துப் போட்டிருப் போம்; "என்னால் இதெல்லாம் முடியாது" எனப் பெருமூச்சு விட்டிருப்போம்; தீர்மானங்களை உடைத்த பின்பு, நமக்கு வசதியான பழைய பழக்கவழக்கங்க ளுக்குத் திரும்பியிருப்போம். நல்லவையும் கெட்டவை யுமான பழக்கவழக்கங்கள் நம்மெல்லாருக்குமே இருக்கின்றன. நம் வாழ்க்கையை மாற்றுவதற்கு கெட்ட பழக்கங்களை நீக்கி, நல்லவைகளை வளர்க்க நாம் என்ன செய்யவேண்டும்?

'பழக்கம்' அல்லது 'பழக்கவழக்கம்' என்கிறோமே -இதன் பொருள்தான் என்ன? எளிதாகக் கூறவேண்டுமாயின், நாம் அடிக்கடி செய்யும் செயல் - ஆகவே அது தானாகவே செய்யும் செயலாகிவிடுகிறது. கெட்ட பழக்கவழக்கங்களை முறிப்பது கடினம் எனினும் கீழ்க்கண்ட முறைகளைப் பின்பற்றினால் அவைகளை மேற்கொள்ள முடியும்.

உன் வாழ்க்கையில் வளர்த்துக்கொண்ட, ஆனால் இப்பொழுது விட்டுவிட விரும்பும் ஒரு கெட்ட பழக்கத்தை எடுத்துக்காட்டாகத் தெரிந்துகொள்வோம். பாத்திரங்களைக் கழுவாமல் பல நாள் அப்படியே போட்டுவிடுகிறாய் என வைத்துக்கொள்வோம். இந்தப் பழக்கம் உன் ஆரோக்கியத்திற்கு கேடு விளைவிக்கும் என நீ அறிவாய். யாராவது திடீரென உன்னைக் காண வீட்டிற்கு வந்தால் தர்மசங்கடமாயிருக்கும் என்பதும் உண்மை. உன்னோடு வாழ்பவர்களுக்கும் இது சகிக்க முடியாத ஒன்று இல்லையா? ஆகவே, பாத்திரங்களைக் கழுவாமல் குவித்து வைக்கும் கெட்ட பழக்கத்திலிருந்து, தினமும் கழுவி வைத்துவிடும் நல்ல பழக்கத்திற்குள் எப்படி மாறிவரப் போகிறாய்?



முதலாவதாக இரவு தூங்கப் போகுமுன் பாத்திரங்களைத் துலக்கிக் கழுவி வைத்தப்பின்

பாத்திரம் கழுவுமிடத்தைச் சுத்த மாய், காலியாக வைக்க வேண்டு மெனத் தீர்மானம் செய்யலாம். முதல் தடவை இது பெரிய வேலையாய் தானிருக்கும். ஆனால் அதற்குப் பிறகு, அதைத் தொடர்ந்து செய்வது எளிதாயிருக்கும். முதல் நாள் பாதி பாத்திரங்கள், அடுத்த நாள் மீதி பாத்திரங்கள் எனப் பிரித்து கூட சுத்தம் செய்யலாம். அதற்கப்புறம் பாத்திரங்கள் குவிந்து கிடப்பதற்கு வாய்ப்பிருக்காது.

இரண்டாவதாக, உன் தீர்மானத்தை எழுதி, நீ ஒவ்வொரு நாளும் பார்க்கும் இடத்தில் வை. உன் தலையணை அருகில் வைத்தால், ஒவ்வொரு நாள் காலையும், இரவும் அதை நீ கட்டாயம் பார்க்க நேரிடும். அதைப் பார்த்தவுடன் திரும்ப சமையலறைக்குப் போய், பாத்திரங்களைச் சுத்தம் செய்துவிட்டு அதன்பின் தூங்கச் செல்வாய்.

மூன்றாவதாக, இப்படி தினம் பாத்திரம் கழுவும் நேரத்தைச் சந்தோஷமாக அனுபவிக்கும் நேரமாக மாற்று. பாத்திரங்களைக் கழுவிக்கொண்டே வானொலி நிகழ்ச்சி ஒன்றைக் கேட்கலாம்; அல்லது ஒலி நாடாவில் பாட்டு கேட்கலாம். ஒரு புதிய பழக்கத்தை நீ உருவாக்கும்போது உனக்கெனப் பிரத்தியேகமாக ஒன்றைச் செய்துகொள். கடைசியில் விளைவு என்னவெனில் -உன் பாத்திரங்கள் பளிச்சிடுகின்றன; வாழ்க்கை எளிதாகவும், சுவையூட்டுவ தாகவும் உள்ளது.

இறுதியில், உன் சாதனையை நீயே உற்றுப்பார். உன் இலக்கை அடை வதற்கு உறுதுணையாயிருந்தவரிடம் உன் தீர்மானத்தைப் பற்றிக் கூறு. நீ எப்படி முன்னேறுகிறாய் என்பது குறித்தும் அவர்களிடம் பேசு. நீ கெட்ட பழக்கங்களை விடுத்து, நற்பழக்கங்களுக்கு மாறும்போது நீ உற்சாகப்படுத் தப்பட வேண்டும் என்பது முக்கியம். உன் இலக்கை நீ எட்டும் போதெல்லாம் உன் உற்சாகம் பெருகும்; உன் தீர்மானத்தைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதும் எளிதாகும். உன் செயல்களைத் திரும்பத் திரும்பச் செய்து, அவை உன் தினசரி வாழ்க்கையாகும் வரை செயல்களைத் திரும்பத் திரும்ப செய்வதால் நற்பழக்க வழக்கங்கள் உருவாகின்றன.

இப்பொழுது ஒரு சவால். ஒருநாள் காலை எழும்பியதும், முந்தின இரவு வேலையை முடிக்கவில்லை எனக் காண்கிறாய். நீ என்ன காரணம் சொன்னாலும், நீ உன் தீர்மானத்தை உடைத்து விட்டாய்; இப்போது நீ உன்னோடு செயல்பட வேண்டும். நீ அவ்வப்போது தவறிவிடுகிறாய் என்பதை நீ ஒப்புக்கொள்வதற்கு, உனக்கு ஆதரவாயிருப்பவர் உதவலாம். உன் தோல்வியையே நினைத்துக் கொண்டிராதே; மாறாக உன்னை நீ மன்னித்துவிட்டு உன் வேலையைத் தொடர்ந்து செய். இம்முறையை ஆவிக்குரிய வாழ்க்கையிலும் பயிற்சி செய்வோம். அதில் எப்படி நல்ல பழக்கங்களை உருவாக்குவது? ஆவிக்குரிய வாழ்க்கைக்கு முரணான பழக்கங்களை விட்டுவிட்டு, நல்லவைகளை உன்னை உருவாக்கிக் கொள்ள முடியும். எடுத்துக்காட்டாக, நீ எப்போதும், எதற்கெடுத்தாலும் கவலைப்படு பவனா? 37-ம் சங்கீதத்தில் தாவீது கூறுவதைத் பார்ப்போம். அவர் உனக்காகவே எழுதுகிறார்- “கவலைப்படுபவர்கள் எரிச்சலடையும்படி எப்போதும் எதையாவது நினைத்துக் கொண்டிருப்பார்கள். ‘எரிச்சலடை வதை’ விட்டு, நீ ‘கர்த்தரை நம்ப’ ஆரம்பிக்கும் நல்ல பழக்கத்தைக் கடைப்பிடிக்க முன்பு பார்த்த அதேபடிகளைக் கையாளலாம். முதலாவது புதிய இலக்கில் துவங்கு:“கர்த்தரை நம்பி நன்மை செய்... கர்த்தரிடத்தில்



மனமகிழ்ச்சியாயிரு ... உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து .. கர்த்தரை நோக்கி அமர்ந்து அவருக்குக் காத்திரு... கோபத்தை நெகிழ்ந்து உக்கிரத்தை விட்டுவிடு”. தேவனால் என்ன சாதிக்கமுடியும் என்பதில் கருத்தூன்றுவதே இலக்கு. ஆகவே அதை எழுது! அவரை நம்பும் முயற்சியில் ஆரம்பித்து, அவருக்கு அடங்கியிரு. இரண்டாவதாக, இந்த ஆண்டு வேதத்தை வாசிக்கும்போது, கர்த்தரை நம்பவேண்டும் என்று கூறும் வசனங்களை ஒரு சிறு குறிப்பேட்டில் எழுதும் பழக்கத்திற்குள் வந்துவிடு. எடுத்துக்காட்டாக, தேவன் நிறைவேற்றிய வாக்குத்தத்தங்கள் அல்லது வேதம் கூறும் பல்வேறு சம்பவங்களில் தேவன் தம் வல்லமையை தத்ரூபமாக நிரூபித்ததற்கான சான்றுகள் ஆகியவைகளை எழுதலாம். தேவன் இடைப்பட்ட பின் மனிதரில் ஏற்பட்ட வித்தியாசங்கள் ஆகியவைகளை எழுதிவைக்கலாம். அவைகளை உனக்கு உற்சாகமூட்டுபவைகளாக எடுத்துக் கொள்ளலாம். உன்னுடைய நினைவுகளை எழுதுவது உன் இலக்கை அடைவதில் அதிக முனைப்போடி ருக்க ஊக்குவிக்கும். மூன்றாவதாக, உற்சாகமூட்டும் செய்திகளை உன்னைச் சுற்றி நினைப்பூட்டுபவைகளாக உன் கண்படுகிற இடங்களில் வைத்துக் கொள். எனக்குப் பிரியமான ஒன்று இதோ!

“தேவை அதிகமாயிருக்கும்போது, அவர் கவனித்துக் கேட்கிறார். பாதை தெளிவற்றிருக்கும்போது, அவர் வழியை அறிந்திருக்கிறார். ஆறுதலளிக்கிறார்” அவரின் அன் பைக் கண்டுக்கொள்ளும்போது, சமாதானம் நிலவுகிறது”.

இறுதியாக, கர்த்தரை முற்றிலும் நம்பும் பாடத்தைக் கற்பதற்கு உதவியைப் பெற்றுக்கொள்வது நல்லது. வேதம், தினசரி நினை வூட்டுதல்கள், உன்னைத் தொந் தரவு செய்யாத ஊக்குவிக்கும் நண்பர் ஆகிய பல்வேறு முனைகளில் உதவியை நாடலாம். உன் அவசர நேரங்களில் தேவனுடைய உதவியைக் கேட்டு ஜெபிக்க மறக்காதே. உன் கவலைகளை தேவனிடம் சமர்ப்பிக்கும் ஒவ்வொரு நேரமும் அவருக்கு நன்றி செலுத்த மறக்காதே.



உலகப் பிரகாரமான பழக்கவழக்கங்களைப் போலவே, இங்கேயும் நீ அவ்வப்போது தடுமாறி விழலாம். அப்படிப்பட்ட சமயங்களில் உன்னை மன்னித்துக் கொள். ஆனால் உடனேயே உன் ஆவிக்குரிய மனஉறுதிக்கும் தீர்மானத்திற்கும் திரும்பிவிடு. நீ புதிதாக உருவாக்கிக் கொண்ட நல்ல பழக்கங்களால் அநேக நன்மைகளை அறுவடைச் செய்வாய் - உலக வேலை மற்றும் ஆவிக்குரிய கடமை. சங்கீதம் 37-ஐத் திரும்பவும் வாசி. உள்ளான மனதில் சமாதானம், சாந்தம், மகிழ்ச்சி, உலகின் பாரம் அழுத்தாமல் அன்றாட வேலைகளைச் செய்யக்கூடிய ஆற்றல் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்வாய்.

*“கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு. அவர் உன்னை ஆதரிப்பார்.”* (சங்கீதம் 55)

# எருசலேம்
## பேரரசனின் மாநகரம்

*"வட திசையிலுள்ள சீயோன் பர்வதம் வடிப்பமான ஸ்தானமும் சர்வ பூமியின் மகிழ்ச்சியுமாயிருக்கிறது, அது மகாராஜாவின் நகரம்"* (சங்கீதம் 48:2.

*"எருசலேமே, உன் வாசல்களில் எங்கள் கால்கள் நிற்கலாயிற்று. எருசலேம் இசைவிணைப்பான நகரமாய்க் கட்டப்பட்டிருக்கிறது. அங்கே இஸ்ரவேலுக்குச் சாட்சியாகக் கர்த்தருடைய ஜனங்களாகிய கோத்திரங்கள் கர்த்தரின் நாமத்தை ஸ்தோத்தரிப்பதற்குப் போகும்".* சங்கீதம் 122:2-4.

*"தேவனுடைய நகரமே, உன்னைக் குறித்து மகிமையான விசேஷங்கள் வசனிக்கப்படும்"* (சங்கீதம் 87:3).

வேதாகமத்தில், இரட்சிப்பின் செய்தியின் மையப்பகுதியில், தேவன் தெரிந்துகொண்ட இனமாகிய இஸ்ரவேலும், அவர் அவர்களுக்குக் கொடுத்த பூமியும் உள்ளன. இந்த ஜாதியிலிருந்து, இந்த தேசத்திற்கு அவரின் ஒரேபேறான குமாரன் வந்தார். *"அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது"* (லூக்கா 1:32,33) என்ற வாக்குத்தத்தம் அவரின் தாயாருக்குக் கொடுக்கப்பட்டது. இஸ்ரவேல் ராஜ்யத்தின் ராஜரீக இருக்கை தாவீதின் சிங்காசனமாகும். இது தேவனால் தாவீதின் சந்ததியாருக்கும், கடைசியில் இயேசுவுக்கு வாக்களிக்கப் பட்டது (1.நாளாகமம் 17:11,12; 28:5; 29:23). ஆகவே, வருங்காலத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தேவனுடைய ராஜ்யத்தின் மேல் ஆளுகை செய்யவிருக்கும் இடம் எருசலேம் என கண்டிருக்கிறார்கள். அனைத்துலக ஆட்சியின் தலைநகரமாக ஆகப் போகிறது.

## எருசலேமின் வரலாறு

சேலம் என்ற மலையுச்சிப் பட்டணமாக கி.மு.1900 ஆண்டில் முதல்முதலாக வரலாற்றில் எருசலேம் காணப்படுகிறது. இஸ்ரவேலரின் முற்பிதாவாகிய ஆபிரகாமைச் சந்தித்து ஆசீர்வதித்த மெல்கிசேதேக் என்ற ஆசாரியன் / ராஜாவோடு தொடர்புபடுத்திக் கூறப்படுகிறது. (ஆதியாகமம் 14:18-20). அதன் பின் எபூசி என்பவரின் பெயருக்கடியில் வருகிறது (யோசுவா 18:28). அது கானானியராகிய எபூசியரின் வாழிடமாக இருந்தது. கி.மு.1004.ல் தாவீது இந்தப் பட்டணத்தை எபூசியரிடமிருந்து கைப்பற்றினான். சீயோன் என்றும், தாவீதின் நகரம் என்றும் அழைக்கப்பட்ட எருசலேம் இஸ்ரவேலின் தலைநகரமாக தாவீதினால் மாற்றப்பட்டது (1.நாளாகமம் 11:4-7).

அரசு இரண்டாகப் பிளவுபட்டபோது, தென் திசை ராஜ்யமாகிய யூதா வின் தலைநகரமாக எருசலேம் தொடர்ந்து விளங்கினது. கி.மு.587.ø பாபிலோனியர்களால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டாலும் (2.ராஜாக் கள் 25:10) பெர்சிய சாம்ராஜ்யத்தால் பழைய நிலைக்குக் கொண்டு வரப்பட்டது. (எஸ்றா 1:1-4; நெகேமியா 2:17, 6:15).



கிரேக்கர் ரோமர்களின் காலங்களிலும் அது முதன்மையான பட்டணமாகத் தொடர்ந்து இருந்து வந்தது. ஆனால் திரும்பவும் கி.பி.70.ல் ரோமர்களால் அழிக்கப் பட்டது.

அதன்பின் வந்த நூற்றாண்டுகளில் பீசோன்கள், பெர்சியர்கள், அரேபியர்கள், சிலுவைப் போர் வீரர்கள் மற்றும் துருக்கியர்களால் ஆக்கிரமிக்கப்பட்டது. இறுதியில் முதல் உலகப் போரைத் தொடர்ந்து பிரிட்டிஷ் அரசின் கீழ் வந்தது. 1948-ல் இஸ்ரவேல் நாடு உதயமான பின், எருசலேம் நகரம், 1967.ல் நடந்த ஆறு நாள் சண்டை வரை இஸ்ரேலுக்கும் ஜோர்டானுக்குமாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஆறுநாள் சண்டைக்குப் பின் மறுபடியும் ஒன்று சேர்க்கப்பட்டு, இன்றைய இஸ்ரேலின் நவீனத் தலைநகரமாகியது.

## தேவனுடைய காலத்திற்கான இடம்

"சமாதானத்தின் அஸ்திபாரம்" எனப் பொருள் கொள்ளும் எருசலேம் என்ற பெயர் இஸ்ரேலின் தலைநகரம் என்பதையும் விட வேதாகமத்தில், அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. யோசுவாவின்



தலைமையின் கீழ் இஸ்ரவேலர் கானான் தேசத்திற்குள் செல்லுமுன்னரே, இஸ்ரவேல் புத்திரர் தொழுதுகொள்ளக் கூடும் இடத்தை தேவன் நியமித்துவிட்டார். அதில் தேவனுடைய நாமம் விளங்கும் எனவும் கூறினார். ..."நீங்கள் யோர்தானைக் கடந்துபோய், உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்க ளுக்குச் சுதந்தரிக்கக் கொடுக்கப்போகும் தேசத்தில் குடியேறும் போதும், சுற்றிலும் இருக்கிற உங்கள் சத்துருக்களையெல்லாம் அவர் விலக்கி, உங்களை இளைப்பாறப்பண்ணுகிறதினால் நீங்கள் சுகமாய் வசித்திருக்கும்போதும், உங்கள் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஓர்இடம் உண்டாயிருக்கும்" (உபாகமம் 12:10,11). இந்த இடம் இருபத்தோரு தடவை உபாகமத்தில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கை மோரியா மலையில் பலியிட ஆயத்தமான அந்த இடம் மிகத் தெளிவாக இஸ்ரவேலரின் தொழுகைக்கான எருசலேம் எனும் இடம் தான் எனக் கண்டிருக்கிறார்கள் (ஆதியாகமம் 22:1,2,14).

தாவீது அரியணை ஏறியபோது, நாட்டின் தலைநகரமாகவும் கர்த்த ருடைய வீடாகிய தேவாலயம் இருக்க வேண்டிய இடமாகவும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட இடம் எருசலேம் எனப் புரிந்துகொண்டான் (1.நாளாகமம்

21:28; 22:1). தேவாலயத்தைக் கட்டுவ தற்காக தாவீது ஏராளமான பொருள்களைச் சவதரித்தான்; வெளிப்படுத்தலின் மூலம் அதன் வரைப்படத் திட்டங்களைப் பெற்றுக் கொண்டான்; தன் மகனாகிய சாலொமோன் ஆலயத்தைக் கட்டும் படியாகக் கட்டளையிட்டான் (1.நாளாகமம் 28:2-6,11,12; 29:1-5). அவனுக்குப் பின் சாலொமோன் பட்டத்திற்கு வந்தபோது, அந்தக் கட்டளைக்கு உண்மையுள்ளவனாயிருந்து, இருபது ஆண்டு காலமாக தேவாலயம், ராஜ அரண்மனை மற்றும் நியாய ஸ்தலத்தைக் கட்டுவதை கண்காணித் தான்: (2.நாளாகமம் 2:1; 3:1,8:1). தேவன் அந்த ஆலயத்தை அங்கீகரித்து, அங்கே அவருடைய ஆவியின் பிரசன்னம் அவர் தெரிந்து கொண்ட மக்களிடையே இருக்கும் என்பதற்கு அடையாளமாக, தெய்வீக மகிமை வெளிப்பட்டது (2.நாளாகமம் 7:1). சாலொமோனுக்கு வந்த கனவில் வார்த்தைகளாலும் வெளிப்படுத்தினார் (வ.12-16).



பாபிலோனிய சிறையிருப்புக்குப் பின் தேவாலயம், ஆகாய், சகரியா எனும் தீர்க்கதரிசிகளின் தூண்டுதலின் பேரில் மறுபடியும் கட்டப் பட்டது (எஸ்றா 1:1-4; 5:1,2 6:14,15). ரோமர்களின் காலத்தில் பெரிய ஏரோது, பிரம்மாண்டமாக தேவாலயத்தைக் கட்டத் துவங்கினான். ஆனல் அது முடியும் தருவாயில் கி.பி.70.ல் அழிக்கப்பட்டது. இந்த ஆலயத்திற்குத் தான் ஆண்டவராகிய இயேசு சென்று, இரண்டு முறை அதன் பிரகாரங்களைத் தவறாகப் பயன்படுத்திய வியாபாரிகளை விரட்டிச் சுத்திகரித்தார் (யோவான் 2:13-17; மத்தேயு 21:12,13). அதன் அழிவைக் குறித்து மிகச் சரியாக தரிசனம் உரைத்தார். ஏனெனில், ஆள்பவர்களின் அநீதியும் வன்முறையும் அங்கு அதிகம். (மத்தேயு 23:34-39;24:1,2).

## இப்போதைய பூசல் போராட்டமும், வருங்கால மகிமையும்

தேவனுடைய சாட்சிகளாக (ஏசாயா 43:10; ரோமர் 11:1,2, 25-27) தேவனுடைய நோக்கத்தில் யூதர்களின் தொடரும் பங்கு குறித்து வேதாகம தீர்க்கதரிசிகள் அறிவிக்கிறபடி, எருசலேமின் எதிர்கால நிலை குறித்து அவர்கள் திட்டவட்டமாகக் கூறுகிறார்கள். இயேசு வானவர் தாமே, யூதர்கள் எருசலேமை விட்டு நாடு கடத்தப்படுவதைப் பற்றி மட்டுமல்ல, எதிர்காலத்தில் அதை மீண்டும் பெற்றுக் குடியேறுவார்கள் என்பது பற்றியும் முன்னறிவித்தார். (லூக்கா 21:24). இது 1967-ல் நடந்த ஆறுநாள் சண்டைக்குப் பின் நிறைவேறியது. தேசங்களுக்கிடையே இன்னும் இந்தப் பட்டணம் சண்டை மற்றும் பூசலின் மையமாக இருந்து வருகிறது. இது அர்மகெதோனுக்கும் இயேசுவின் வருகைக்கும் நடத்தும் . இப்பொழுது இருக்கிறபடி, உலகத் தலைவர்களால் தீர்க்க முடியாத பிரச்சினையாக இருந்து



வருகிறது.

இருப்பினும், அதே தீர்க்கதரிசிகளால் எருசலேமின் எதிர்கால மகிமை யும் உறுதியாக்கப்பட்டுள்ளது. தேசங்கள் ஆராதனை செய்யும் ஆராதனை மையமாக செயல்பட தேவாலயம் மீண்டும் கட்டப்படும் (சகரியா 14:16; எசேக்கியேல் 43:4-7). நீதியையும் சமாதானத்தையும் கொண்டு வருவதற்கான தேவனின் நீதியுள்ள சட்டங்களால் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அனைத்துலகையும் அரசாள்வதற்கான இடமாக எருசலேம் அமையப்போகிறது (ஏசாயா 2:1-4; மீகா 4:1-7). விசுவாசத்தினால் இயேசுவின் உண்மையான அடியார்களாகிறவர்கள் எருசலேமின் கௌரவ குடியுரிமையில் பங்கு கொள்ளும் சிலாக்கியம் பெற்றவர்கள் (சங்கீதம் 87:5,6). நகருக்கு வரப்போகும் மகிமையைக் காண்பார்கள்.

“அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமைப் பொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது தமது மகிமையுள்ள சிங்காசனத் தில் வீற்றிருப்பார். அப்பொழுது சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள்” (மத்தேயு 25:31,32).

“எருசலேமின் சமாதானதுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்; உன்னை நேசிக்கிறவர்கள் சுகித்திருப்பார்களாக. உன் அலங்கத்திற்குள்ளே சமாதானமும், உன் அரமனைகளுக்குள்ளே சுகமும் இருப்பதாக. என் சகோதரர் நிமித்தமும் என் சிநேகிதர் நிமித்தமும் உன்னில் சமாதானம் இருப்பதாக என்பேன். எங்கள் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்தினிமித்தம் உனக்கு நன்மையுண்டாகத் தேடுவேன்” (சங்கீதம் 122:6-9).

அநேக ஆண்டுகளுக்கு முன் கிறிஸ்டடெல்ஃபியன் சஞ்சிகை ஒன்றில், சபை செய்தி ஒன்று வெளியிடப்பட்டிருந்தது:



“நமக்கு அருமையான சகோதரரி ....அவர்கள் கர்த்தருக்குள் நித்திரை யடைந்து விட்டார்கள். வாழ்க்கைப் பாதையில் **60** ஆண்டுகள் இருந்தார்கள்” ஏதோ வழியை அவர்கள் அடைத்துக்கொண்டி ருந்தார்கள் என்பதுபோல் தெரி ந்தாலும் இதன் அர்த்தம் நம் எல்லாருக்கும் தெரிந்ததே. வழி யே'நடப்பதுபற்றி சாலொமோன் விளக்கமாக கூறுகிறார். செம் மையான பாதை பற்றிப் பேசு கிறார்.

*“புத்திமதிகளைக் காத்துக்கொள் ளுகிறவன் ஜீவவழியில் இருக்கி றான்” “ஞானமார்க்கத்தை நான் உனக்குப் போதித்தேன்; செவ் வையான பாதைகளிலே உன் னை நடத்தினேன்”*

தேவன் நம்மிடம் எதை விரும்புகிறார் எதைத் தவிர்க்க வேண்டும் என்பதைத் தெளிவாக்கும் பொருட்டு, நாம் நீதி என்றால் என்ன என்று அறிந்துக்கொள்வதற்காக

வேதாகமம் எழுதப்பட்டது. நாம் செவ்வை யான வழியை கற்றுக்கொண்டு அதிலே நடக்கவேண்டும். *"பேதைமையை விட்டு விலகுங்கள்; அப்பொழுது பிழைத்திருப்பீர்கள்; புத்தியின் வழியிலே நடவுங்கள். .நீதியின் பாதையில் ஜீவன் உண்டு. செம்மையானவர்க ளுடைய நீதி அவர்களைத் தப்புவிக்கும்", "நீதியின் வழியில் உண்டாகும் நரைமயிரானது மகிமையான கிரீடம்". "சன்மார்க்கன் துன்மார்க்கனுக்கு அருவருப்பானவன்".*

உண்மையில் பல வழிகள் உள்ளன. ஜீவனுக்கு நேராய் நடத்தும் சரியான வழி, ,மரணத்திற்கு நேராய் நடத்தும் தவறான வழி. இந்த வழிகளை சாலொமோன் வேறுபடுத்திக் காட்டுவதைப் பாருங்கள்: **"மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழியுண்டு; அதின் முடிவோ மரணம்."** என்பதால், சரியான வழியைக் காண்டுபிடித்து, அதிலே நிலைத்திருப்பது மிகமிக முக்கியம். தவறான வழி சரியானதாக இருக்கலாம் என நாம் நம்மையே வஞ்சித்துக் கொள்வது மட்டுமல்ல, தவறான வழியில் தாங்களும் போய்க்கொண்டு, அவர்க ளின் செயல்களில் நம்மையும் சேர்ந்துகொள்ள உற்சாகப்படுத்தும் அநேகர் இருக்கிறார்கள். தனது நீதிமொழிகளின் ஆரம்பத்திலேயே *"பாவிகள் உனக்கு நயங் காட்டினாலும் நீ சம்மதியாதே ... என் மகனே, நீ அவர்களோடே வழி நடவாமல், உன் காலை அவர்கள் பாதைக்கு விலக்குவாயாக,"* என தங்கள் வழிகளிலே நாமும் நடக்கவேண்டுமென விரும்பும் பொல்லாத மக்களைக் குறித்து சாலொமோன் நம்மை எச்சரிக்கிறார்.

## சரியான வழியை நாம் எப்படிக் கண்டு பிடிப்பது?

இயேசுவானவர் தம் சீஷர்களுக்கு ஆறுதல் அளித்துப் பேசுகையில் *"உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாச மாயிருங்கள்; என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்,"* என்றார். மேலும், *"நான் போகிற இடத்தை அறிந்திருக்கிறீர்கள், வழியையும் அறிந்திருக் கிறீர்கள்"* என்றார். சீஷர்கள் குழம்பிப் போனார்கள். ஆகவே தோமா. "ஆண்டவரே, நீர் போகிற இடத்தை அறியோமே, வழியை நாங்கள் எப்படி அறிவோம்?" என்றான். அதற்கு இயேசு, *"நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்"* என்றார்.

ஆகவே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிற இயேசுவைப் பின்பற்று வது தான் சரியான ஜீவவழி. அப்படியென்றால் அவர் சொல்லு கிறபடியே அவருக்குப் பின்செல்வோனாக இருக்கவேண்டும். *என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது. நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது"* இயேசு வுக்குப் பின்செல்லுவதன் மூலம் அவருக்கு ஊழியம் செய்யும் போது, நாம் எப்போதுமே செம்மையான வழியில் இருப்போம். நல்ல மேய்ப்பனாகிய அவர் பின் செல்லும்போது அவர் நம்மை நீதியின் பாதையில் அவரின் ராஜ்யத்திற்கு நேராய் நம்மை நடத்துவார்.

இயேசுவைப் பின்பற்றுவதையே நம் வாழ்வின் இலக்காகக் கொள்ள வேண்டும். *"ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்தால் அவனை பிதாவானவர் கனம் பண்ணுவார்"* என்று அவர் நமக்குச் சொல்லுகிறார்.



## எப்படிப்பட்ட வாழ்க்கை நமக்கு இருக்கப் போகிறது?

"ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக் கடவன்," என இயேசுவானவர் தம் சீஷர்களுக்கு விளக்குகிறார். இயேசுவைப் பின்பற்றுவதில் சிலுவையும் அடங்கி யிருக்கிறதென்றால், ஒரு வசதியான வாழ்க்கையை, ஒரு மலர்ப்படுக்கையைத் தருவதாக அவர் வாக்களிக்கவில்லை, எனும் உண்மையை நாம் கற்றுக்கொள் கிறோம்..

*"என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்,"* என்று நம்மை அவர் எச்சரிக்கிறார். ஆகவே இயேசு, "திடன் கொள்ளுங்கள்; உங்களுக்குத் தொந்தரவுகள் உண்டு. ஆனால் நன் ஜெயித்துவிட்டேன். ஆகவே நீங்களும் ஜெயிக்க முடியும்," என்கிறார்.

இந்த நம்பிக்கையைப் பவுலும் எதிரொலிக்கிறார்: *"என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு".* அவரால் முடிந்தது 'நம்மாலும் செய்யமுடியும். பவுல் சபைகளின் மத்தியில் பயணித்து, விசுவாசத்தில் நிலைத்திருக்கும் படியும், அநேக உபத்திரவங்களின் வழியாய் நாம் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமென்று புத்திசொல்லி, ஆறுதலும் அளித்தார். மெய்யாகவே பவுல் இயேசு சென்ற பாதையில் அவரைப் பின்பற்றிச் சென்றதல், *"நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறது போல நீங்களும் என்னைப் பின்பற்றுகிறவர்களாகுங்கள்,"* என அவரால் சொல்ல முடிந்தது.

**60** ஆண்டுகள் பாடுகள் சகித்து, அந்தப் பிரியமான சகோதரி நித்திரையடைந்தார்கள் என நாம் அறிவோம். நம் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு அவரைப் பின்பற்றச் செல்லவேண்டும் என்றுரைத்த நம் ஆண்டவரைப் பின்பற்றும் சரியான பாதையில் நாம் இருக்கிறோமெனில், உயிரோடிருக்கும் நமக்கும் தொந்தரவுகள், துன்பங்கள் உண்டு. நற்செய்தி யாதெனில், அவருடைய நித்திய ராஜ்யத்திலுள்ள இடங்களுக்கு அவர் நம்மை அழைத்துச் செல்கிறார். அப்பொழுது, "அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலு மில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின".

-ராபர்ட் ஜே. லாயிட்.

# பொன் கன்றுக்குட்டி

## “என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்”

கர்த்தர் இஸ்ரவேலரைச் சந்தித்து எகிப்திலிருந்து விடுவித்தார். எந்த வகையில் பார்த்தாலும் அவர்கள் அவருடைய ஜனமாக இருந்தார்கள். அவர்களை அவர் தமது ஒளிவிளக்காக ஜாதிகளுக்கு ஏற்படுத்தி, மற்ற வர்களை தமது சத்தியத்துக்கு வரவழைக்கும்படி சித்தங்கொண் டிருந்தார் (2.சாமுவேல் 3:9 ஒப்பிடுக). அவர்கள் “ராஜரீக ஆசாரியக் கூட்டமாக” இருக்கவேண்டியிருந்தார்கள் (யாத்திராகமம் 19:6). அவர்கள் மூலம் கர்த்தருடைய சத்தியத்தின் ஒளி உலகத்திற்குப் பிரகாசிக்க வேண்டும். இஸ்ரவேலின் நிலையை உலகத்தின் மத்தியில் திடப்படுத்தும்படிக்கு, கர்த்தர் அவர்கள் மத்தியில் வாசஞ்செய்து வீற்றிருப்பேன் என்று வாக்களித்தார் (யாத்திராகமம் 25:û8; 29:45,46). அவர்கள் பாவஞ்செய்து விக்கிரகாராதனைச் செய்யும் பட்சத்தில் கர்த்தர் அவர்கள் நடுவில் இருப்பது கூடாது. ஏனெனில் “ஒளி”யும் “இருளும்” ஒன்றாக இருப்பது கூடாது (2.கொரிந்தியர் 6:14-18 ஒப்பிடுக; எபேசியர் 5:8).

இந்தப் பாடத்தின் நோக்கம், மனித சுபாவம் மாறக்கூடியது. ஏனெனில் மோசேயினால் சீனாய் மலையில் மறைந்துப் போனபின்பு, இஸ்ரவேலர் கர்த்தருடைய அற்புதங்கள் அனைத்தையும் வாதைகளின் பாடங்களை யும் மறந்து, விக்கிரகங்களுக்குப் பின்னால் திரும்பினார்கள் என்பதைக் காட்டுவதாகும்.

**<u>யாத்திராகமம் 32</u>**

### மோசே மலை ஏறுகிறான்

**(யாத்திராகமம் 24)**

மோசே ஐந்தாம் முறை சீனாய் மலையில் ஏறிப்போனபோது (வ.9-18), ஆசரிப்புக் கூடாரத்தின் வரைபடமும் கட்டளையும் பெற்றுத் திரும்புவ தற்குள் பொன் கன்றுக்குட்டியின் பாவம் நடந்தது.

இந்த ஐந்தாவது மலையேறுதல் மிக முக்கிய அம்சம் பெற்றது. அவனுடைய நான்காம் மலையிறங்குதலில் உடன்படிக்கை பக்தியுடன் சீராக உறுதிசெய்யப்பட்டது (வ.3-8).இப்போது அவன் “கர்த்தருடைய விரலினால்” இரண்டு கற்பலகைகளில் பத்துக் கற்பனைகள் எழுதி வாங்கிவர ஆயத்தமானா (உபாகமம் 9:9-11). மேலும் ஆசரிப்புக் கூடாரத்தின் விளக்கத்தையும் பெறுவதாக இருந்தான். இது மாபெரும் பொறுப்பு. எனவே ஆரோனையும் ஊரையும் அவர்களுக்குப் பொறுப்பாக (வ.14) நியமித்த, யோசுவாவை பாதிவழி மட்டும் அழைத்துச் சென்று மேலே மலையேறினான். அங்கு நாற்பது நாட்கள் இரவும் பகலும் தங்கிவிட்டான் (வ.13; 32:17).

### மோசே இல்லாதபோது ஜனங்கள் முறை தவறினார்கள்

**(யாத்திராகமம் 32:1-6).**



சுமார் ஒரு மாதகாலம் சென்றப்பின் ஜனங்களுக்குள் ஒருவித சலசலப்பு உண்டானபோது மோசே மலையிலிருந்தான். மேகஸ்தம்பம் ஜனங்களின் நடுவிலிருந்து இடம்பெயர்ந்து மலையுச்சியில் தங்கினது (24:15). பொறுமையிழந்த ஜனங்கள் மோசே இறந்துவிட்டதாக எண்ணி,

அவனை “இந்த மோசே” என்று அக்றிணையில் குறைவாகப் பேசினார்கள். நாட்கள் கடந்து செல்ல அவர்களுடைய பொறுமையின்மை பதற்றமாக மாறி, அவர்களுடைய முறுமுறுப்பும் பற்றாக்குறையும் பாளயமெங்கும் ஒலிக்க ஆரம்பித்தது. ஜனங்கள் ஆரோனிடம் கூடிவந்து, அவர்களுக்கு முன் செல்ல ஒரு தேவதையை உருவாக்க வேண்டும் (வ.1) என்று அவனை வற்புறுத்தினார்கள்.



ஆரோன் ஜனங்களுடைய பயமுறுத்தலுக்குப் பணிந்தான். அவன் அவர்களுடைய தங்க காதணிகளைக் கழற்றித் தரும்படி கேட்டான். அதைக்கொண்டு அவன் வார்த்து பான் கன்றுக்குட்டி ஒன்றை உருவெடுத்தான் (வ.2-4). அவர்களுடைய காதுகள் உண்மையிலே யாஹ்வே கர்த்தருடைய சத்தத்துக்குச் செவிசாய்க்காமல் போய்விட்டிருந்தது. (நீதிமொழிகள் 25:11-12). சில வாரங்களுக்கு முன்புதான் அவர் கள் யாஹ்வே கர்த்தரின் சத்தத்தைக் கேட்டிருந்தார்கள். “எனையன்றி உங்களுக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்” என்று அவர் சொல்ல அந்தப் பொருத்தனையும் செய்திருந்தார்கள். அவர்கள் விக்கிரகங்களை உருவாக்குவதும் வணங்குவதும் தடைச்செய்யப்பட் டிருந்ததை (யாத்திராகமம் 20:1-4). இப்போது அவர்கள் மறந்துவிட்டடார் கள்.

கன்றுக்குட்டி எகிப்தியரின் தெய்வங்களில் ஒன்று. இந்த பிம்பம் அவர்கள் மனதில் தங்கியிருந்ததாகத் தெரிகிறது. ஏனெனில் பின்பு ஸ்தேவான் குறிப்பிடுகையில் “அவர்கள் தங்கள் மனதில் மறுபடியும் எகிப்து தேசத்துக்குச் சென்றார்கள்” என்று கூறினான் (அப்போஸ்தலர் 7:38-41).அவர்கள் சரித்திரத்தின் பிற்பகுதியில், அவர்களிடமிருந்து வேறு பட்ட பத்து கோத்திரங்களும் தாங்கள் ஆராதிக்கும்படி எகிப்திய விக்கிரகங்களைத் தங்கள் ஆராதனை மையமாக ஏற்றுக் கொண்டார் கள். அச்சமயம் கூரப்பட்ட வார்த்தைகள் ஏறக்குறைய அதே தோற்றத் தைப் பிரதிபலிக்கின்றன: “இவைகள் உங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணின உங்கள் தேவர்கள்” (1.ராஜாக்கள் 12:28-30).

அடுத்த நாள் உதயமாகிற வரைக்கும் ஜனங்களுக்குப் பொறுமை இல்லாதிருந்தது. ஏனெனில், “மறு நாள் அதிகாலையில்” ஜனங்கள் எழுந்து பாவம் நிறைந்த கொண்டாட்டத்தில் ஈடுபட ஆரம்பித்தனர் (வ.6). பவுல் அவர்களுடைய

விக்கிரக வணக்கத்தைக் குறித்து 1.கொரிந்தியர் 10:7-ல் எழுதியுள்ளார் (வ.14 கவனிக்க).

## விக்கிரக ஆராதனையின் அழிவு நிறைந்த முடிவு

பத்து கற்பனைகளில் முதல் கட்டளைக் கூறுகிறது, "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்" இரண்டாம் கற்பனை கூறுகிறது, "ஒரு சொரூபத்தையாகிலும், யாதொரு விக்கிரகத் தையாகிலும் நீ உனக்கு உண்டாயிருக்க வேண்டாம்" (யாத்திராகமம் 20:3-4). ஆரோன் இந்தக் கற்பனைகளை முறித்து நடந்ததை ஒரு பொருட்டாக நினையாதவனைப் போல நடந்துக்கொண்டான். அவன் கன்றுக்குட்டியை ஒரு விக்கிரகமாக பொருட்படுத்தாமல், யாஹ்வே கர்த்தரின் நினைவாக நினைத்திருக்கலாம். ஏனெனில் அவன் ஜனங்களிடம், 'யாஹ்வே கர்த்தருக்குப் பண்டிகை' என்று பேசினான். அதைக் கன்றுக்குட்டிக்கு என்று அவன் மனதில் யோசித்தது இல்லை (வ.5). ஆனாலும் அது இரண்டாம் கற்பனையை மீறும் செயலாக அவன் மேல் கணக்கிடப்பட்டது. யாத்திராகமம் 33:8-ல் ஜனங்கள் யாஹ்வே கர்த்தரை விட்டு வேறே தேவர்களுக்குப் பின்னால் சென்றதாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. இயற்கையாக ஒரு பாவம் மற்றொரு பாவத்திற்கு நம்மை வழிநடத்தக்கூடியது. தேவனை வணங்கும்போது ஒரு சிலையை வைத்து வணங்கினால், அது தொழுகிறவர்களுக்கு முன்பாக யாஹ்வே கர்த்தரை அவமானப்படுத்தும் செயலாகும். அவர்கள் கண்களில் யாஹ்வே கர்த்தருக்குப் பதிலாக விக்கிரகங்களே நினைவில் நிற்கும்.

மனிதனின் கிரியைகளுக்காக கர்த்தர் சிட்சைக் கொடுக்கும்போது அதை ஏற்றுக்கொள்ள அவன் சங்கடப்படுகிறான். ஆகவே அவன், "அழி வில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள ஆத்துமாக்களு டைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினான்" (ரோமர் 1:23, சங்கீதம் 106:19-20). மனி தனைத் தேவன் தம்மிடம் பொறுப்புள்ளவனாக உண்டாக்கியிருக்கும் போது அவன் உண்மையான தேவனுக்குக் கீழ்ப்படிய மறுத்தால், தனக் கென்று ஒரு தேவதையை வணங்கும்படி உண்டாக்கி, தனது கற்பனை யின்படி மனிதஅந்தஸ்துக்குச் சற்று கீழாக உருவாக்கி, பின்பு அதன் பீடத்துக்குமுன் விழுந்து பணிகிறான் (கொலோசெயர் 3:5).

## மோசேயின் மன்றாட்டு

**(யாத்திராகமம் 32:7-14)**.

மலையின் உச்சியில் இருந்த மோசே கீழே நடந்துக் கொண்டிருந்த துரோகத்தைப் பற்றி அறியாதிருந்தான். கர்த்தர் அது குறித்து அவனுக்கு அறிவித்து, சீக்கிரமாய் இறங்கி போகும்படித் துரிதப்படுத்தி னார். தமது தூதன் மூலமாக மோசேயுடன் பேசிய யாஹ்வே கர்த்தர் (அப்போஸ்தலர் 7:38) உடன்படிக்கை முறிக்கப்பட்டுப்போனதை அவனுக்கு அறிவித்தார். அவர் மோசேயிடம், இஸ்ரவேலரைப் பூமியில் இராதபடிக்கு அழித்துப் போட்டு, அவர் ஆபிரகாமுடன் செய்ததுபோல எல்லாவற்றையும் புதிதாக் குவேன், என்றார்.

மோசேயின் மேலான குணமானது அவன் இஸ்ரவேலருக்காக பரிந்து பேசுகையில் அவர்கள் செய்த பாவத்தை எந்தவகையிலும் மிகைப்படுத் தாமல் இருந்ததிலிருந்து தெரிகிறது:



1. அவர்கள் கர்த்தரால் எகிப்திலிருந்து மீட்கப்பட்டவர்கள்;
2. அவர்களின் அழிவை எகிப்தியர்கள் தங்கள் வெற்றியாக நினைப்பார்\கள்;
3. அவர் ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் இஸ்ரவேலோடே (இந்தப் பேர் யாக்கோபு என்று இருந்தது. ஆனால் "அவன் தேவனோடு போராடி மேற்கொண்டான்" (ஆதியாகமம் 32:28 ஒப்பிடுக) செய்த உடன்படிக்கையை நினைவூட்டும்படி வேண்டினான்.

மோசேயின் மன்றாட்டினால், கர்த்தர் தமது தீர்மானத்தை மாற்றி, அவர்களை முற்றிலும் அழித்துப்போடவில்லை (சங்கீதம் 99:6).

## விக்கிரகாராதனை ஒடுக்கப்படுதல்

**(யாத்திராகமம் 32:15-29)**.

மோசே அவசரமாக கீழே இறங்கினான். அவனுடைய இரண்டு கைகளிலும் கர்த்தர் தமது கையால் எழுதி கொடுத்த பத்து கற்பனை கள் பதிந்த கற்பலகைகள் இருந்தன (உபாகமம் 9:15). அவன் வருகிற வழியில், யோசுவாவைச் சந்தித்தான். அவர்கள் கீழே இறங்கி வரும் போது, கீழே பாளயத்திலிருந்து கூக்குரலின் சத்தத்தைக் கேட்டார்கள். யோசுவா தவறாக அதை யுத்தத்தின் சத்தம் என்று நினைத்தான். ஆனால் மோசேக்கு அதைவிட நன்றாக தெரிந்தது (வ.7-8 ஒப்பிடுக). அவன் கூறினான்: "அது ஜெயத் தொனியாகிய சத்தமும் அல்ல, அப ஜெயத் தொனியாகிய சத்தமும் அல்ல, பாடலின் சத்தம் எனக்குக் கேட்கிறது" (வ.18) அவர்கள் பாளயத்தை நெருங்கி வரும்போது, "கன்றுக்குட்டியையும், நடனத்தையும்" மோசே கண்டு, அவர்கள் வழிவிலகிப் போனதைப் பார்த்து கோபமூண்டு, " தன் கையிலிருந்த கற்பலகைகளை மலையில் கீழ் எறிந்து உடைத்துப்போட்டான்".

அப்போது மூன்று குறிப்பிட்ட செய்கைகள் மூலம் மோசே விக்கிரக ஆராதனையை ஒடுக்கினான்.

1. அவன் விக்கிரகத்தை நொறுக்கி, அதைத் தூளாக அரைத்து அதை அவர்கள் குடிநீரில் கலந்தான். அவர்கள் தங்கள் "தெய்வத்தை"க் குடிக்க வேண்டியதாயிற்று (வ.20).!.
2. பின்பு அவன் ஆரோனிடம் கேள்வி கேட்டான். ஏனெனில் ஆரோனின் மெத்தன போக்கு விக்கிரக ஆராதனையைத் தூண் டியது. (ஒரு பலமான குரல் கொடுத்திருந்தால் அதை அவன் தடுத்திருக்கலாம்). அவனுக்காக மோசே விண்ணப்பம் பண்ணி னதால் அவன் சும்மா விடப்பட்டு, மன்னிக்கப்பட்டான் (உபாகமம் 9:20).
3. பின்பு அவன் விக்கிரக ஆராதனைக்கு மூல காரணமாக இருந்தவர்களைக் கண்டுப்பிடித்து, லேவி கோத்திரத்தாரின்

உதவிகொண்டு, 3000 விக்கிரக ஆராதனைக்காரரை வெட்டிப் போட்டான். லேவி கோத்திரத்தார் மோசேக்கு ஆதரவாக நின்றனர் (வ.26-28).

## இஸ்ரவேலருக்காக மோசேயின் இரண்டாவது மன்றாட்டு

(யாத்திராகமம் **32:30-35**).

1. இஸ்ரவேலரின் பாவத்திற்காக அவர்களைத் தண்டித்திருந்தும், அவர்களுக்கும் தேவனுக்கும் நடுவேயுண்டான பிளவை மோசே மனதார உணர்ந்திருந்தான். தேவையாக இருந்தது, ஒப்புர வாகுதல். எனவே ஆறாவது முறையாக மோசே மறுநாளில் மலையேறினான். இந்த முறை இஸ்ரவேலரின் மன்னிப்புக்காக பரிந்துரைக்கும்படி சென்றான். அவர்கள் பாவத்திற்காகவும், இரட்சிப்புக்காகவும் தான் மரிக்கவேண்டி இருந்தால் அதற்கும் அவன் ஆயத்தமாயிருந்தான். இதைத் தேவன் தேவன் இரு மூல காரணங்களுக்காக மறுத்தார்.
2. .தேவனுடைய முறைப்படி எந்த மனுஷனும் ஒப்புரவாகுத லுக்காக, மற்ற மனிதருடைய பாவத்துக்குப் பதிலாக மரிப்பது அவசியமில்லை (வச.33, எசேக்கியேல் 18:4,20. இஸ்ரவேலர் பாவஞ்செய்தால், அவர்கள் தண்டனைப் பெறவேண்டும். இந்த ஒழுங்கு கிறிஸ்துவின் இரட்சிப்பின் கிரியையிலும் பின்பற்றப்பட வேண்டும். நமது பாவமன்னிப்பிற்காக அவர் மரிக்கவேண்டிய தாயிற்று. அதனால் நாமும் அவருடைய நாமத்தில் விசுவாசம் வைத்து, ஞானஸ்நானம் பெறும்போது "பாவத்திற்கு மரிக்க" வேண்டும். இவ்வாறு நாம் அவருடைய சிலுவை மரணத்தின் மூலம் அவருக்குள் ஒன்றாக இணைகிறோம் என்பது தத்துவ ரீதியாக விளங்குகிறது. அதனால் நாம் நமது பாவவழிகளை கைவிட்டு தேவனுக்குக் கீழ்ப்படிய ஆரம்பிக்கிறோம் (ரோமர் 6:4-6). இயேசு கூறினது போல, நாமும் நமது சிலுவையைச் சுமந்து அவரைப் பின்பற்ற வேண்டும் (மத்தேயு 16:24).சில திருச்சபைகளில் போதிப்பதுபோல, இயேசு நமக்குப் பதிலாக மரித்தார், அல்லது அவர் நமது பிரதிபலியானார் என்று கூறுவது தவறு.
3. யாத்திரையில் (தொடர்ந்து முன்னே செல்வதற்கு) பாவம் மன்னிக்கப்படவேண்டும். ஆனால் அதன் தடயங்களாக பாவத் தின் நிழல் நீங்காமல் தரித்திருக்கும். ஏனெனில் பாவம் செய்த வனுடைய ஜீவியத்தில் பாவஞ் செய்யாதது போல, அதன் பிரதிபலிப்பும், பாதிப்பும் இல்லாமலிருக்கும்படி எதிர்பார்ப்பது கூடாதது. அதற்கு மாறாக, பாவஞ்செய்தவர்கள் அதன் பலனை அனுபவிப்பார்கள் (வச.34-35).



பாவத்துக்கு எதிரான போராட்டம் தனிப்பட்டு தனிமனிதனைப் பொறுத்ததாக இருக்கவேண்டும். மேலும் நம்மை நாமே எந்த பாவத்துக்கும் அடிமைப்படுத்த துணிவதில்லை (ரோமர் 6:15). எனவே நாள் முழுவதும் நமது சிந்தை, வார்த்தை, அல்லது செய்கையில் "நம்மைச் சுலபமாக இழுக்கக்கூடிய பாவத்திலிருந்து" நம்மை விலக்கி நடந்துக் கொள்ளும்படி கவனமாக இருக்கவேண்டும்.

## நமக்குப் பாடங்கள்:

- கர்த்தருடைய வழிநடத்துதலைப் பெறும்படி மோசே மலை யேறிப் போனான். அதைப்போலவே இயேசு கிறிஸ்து சில காலத்துக்கு வானத்துக்குள் ஏறிப்போனார் (லூக்கா 19:12; அப்போஸ்தலர் 1:7, 11).
- மோசே நீண்டகாலம் திரும்பி வராததால் அவன் உயிரோடு இருக்கிறானா இல்லையா என்று இஸ்ரவேல் ஜனங்கள் சந்தேகித்தனர். அதைப்போலவே, கிறிஸ்துவின் வருகையைக் குறித்து பரியாசக்காரர், "அவர் வருகையைக் குறித்த அவருடைய வாக்குத்தத்தம் எங்கே?" (2.பேதுரு 3:3-4) என்று கேட்பார்கள். இயேசுகிறிஸ்து திரும்பி வருவதற்கு தாமதிப்பதை ஒரு காரணமாக வைத்து நாம் கவலையீனமாக பாவத்தில் வழுக்கி விழுவதும், நமது உலகஇச்சைகளை நிறைவேற்ற முயற்சிப்ப தும் கூடாது. நாமும் அந்த பொல்லாத ஊழியக்காரன் தன் மனதில், "என்னுடைய எஜமான வரத் தாமதமாகும் (மத்தேயு 24:48-51) என்று சொன்னது போல யோசித்து செயல்படாமல் இருப்போமாக.
- இஸ்ரவேலர் தங்கள் மாம்ச இச்சைகளை நிறைவேற்ற ஆசை யாக இருந்ததால், விக்கிரக ஆராதனைக்கு இடங்கொடுத்தார் கள். பொருளாசையும் அவ்விதமாகவே இன்று நம்மை வழி நடத்தக்கூடியது (கொலோசெயர் 3:5). உலகம் நமக்கு ஏராள மான வசதிகளையும், இன்பங்களையும் கொடுக்க வல்லது. ஆகவே நமது விசுவாசத்துக்கு அடுத்த இப்படிப்பட்ட காரியங் களின் ஆபத்தைக் குறித்து நாம் விழிப்புள்ளவர்களாக ஜீவிப்பது அவசியம்.

மோசே திரும்பி வந்தபோது பாவஞ் செய்தவர்களுக்குத் தண்டனை வழங்கினான். ஆனால் அதே சமுதாயத்தில் விசுவாசமும் உண்மையும் உள்ளவர்களாய் இருந்தவர்களுக்காக மோசே தேவனிடம் பரிந்து பேசினான். கிறிஸ்துவும் அப்படியே செய்கிறார் (2.கொரிந்தியர் 5:10).